# பிதாவின் ஞானமென்ற வகையில் குமாரன்

*குமாரனுடைய ஞானத்தை முழுமையாக மதிப்பதற்கு, நாம் முதலில் அவரை பிதாவின் ஞானம் என்ற வகையில் காண வேண்டும். பிதாவின் ஞானமானது படைப்பில் நமக்கு முதலில் வெளிப்படுத்தப்பட்டது. முடிவற்றதில் இருந்து தேவனுடைய வெளிப்பாடான/விளக்கமான குமாரனாகிய தேவன் வந்து அகிலத்தையும், நமது உலகத்தையும் மற்றும் காலத்தையும் இருக்கச் செய்தார்.*

## *புதிய ஏற்பாட்டில் போதிக்கப்பட்டுள்ள வகையில்*

*தேவன் "முதலில்" வெளிப்படுத்தியதை நன்கு புரிந்து கொள்வதற்காக, அவர் "கடைசியாக" வெளிப்படுத்தியதை ஆராய்ந்து பார்த்து அதன் மூலம் தொடக்கத்திற்கு முன் இருந்தது என்ன என்பதை நாம் அடைவோம். இதை நாம், படைப்பிற்கு முன்பு இயேசு தேவனுடைய ஞானம் என்ற வகையில் இருந்ததற்கான புதிய ஏற்பாட்டுக் கோட்பாட்டை ஆராய்ந்து பார்ப்பதன் மூலம் செய்வோம்.*

*புதிய ஏற்பாடானது, காலம் தொடங்கு முன்பே தேவனுடைய ஞானம் இருந்தது என்றும், அந்த ஞானமானது சிலுவையில் அறையப்பட்ட "மகிமையின் கர்த்தரில்" இருந்து பிரிக்க முடியாததாக இருந்தது என்றும் சுட்டிக்காட்டுகின்றது:*

> *அப்படியிருந்தும், தேறினவர்களுக்குள்ளே ஞானத்தைப் பேசுகின்றோம்; இப்பிரபஞ்சத்தின் ஞானத்தையல்ல, அழிந்து போகிறவர்களாகிய இப்பிரபஞ்சத்தின் பிரபுக்களுடைய ஞானத்தையுமல்ல, உலகத் தோற்றத்திற்கு முன்னே தேவன் நம்முடைய மகிமைக்காக ஏற்படுத்தினதும், மறைக்கப்பட்டதுமாயிருந்த இரகசியமான தேவ ஞானத்தையே பேசுகின்றோம். அதை இப்பிரபஞ்சத்துப் பிரபுக்களில் ஒருவனும் அறியவில்லை; அறிந்தார்களானால், மகிமையின் கர்த்தரை அவர்கள் சிலுவையில் அறையமாட்டார்களே. எழுதியிருக்கிறபடி: தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணியவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை; நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர்*

> எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந் திருக்கின்றார் (1 கொரி. 2:6-10).

அப்போஸ்தலிக்க யுகம் தொடங்கும் வரையிலும் இந்த வியப்பூட்டும் சத்தியமானது அறியப்படாதிருந்தது, ஏனென்றால் இது கடந்த காலத்தில் தேவனுடைய "மறைக்கப்பட்ட" "இரகசியமாய்" இருந்தது. வெளிப் படுத்தப்பட்ட இரகசியமானது நமக்கு அதிசயத்தின் பலகணிகளைத் திறந்து வைத்துள்ளது. மேற்கண்ட வேதவசனப் பகுதியானது முற்காலத்திலிருந்து கிறிஸ்துவின் சிலுவைக்கு நீட்டிக்கப்பட்ட ஒரு பாலத்தைச் சுட்டிக் காட்டுகின்றது. இந்தப் பாலமானது இதன் "மாபெரும் திறப்பு நிகழ்ச்சியை" பெற்றிருந்த பொழுது தேவனுடைய ஞானமானது இயேசுவில் உறுதியாய் ஏற்படுத்தப்பட்டது.

தேவனுடைய ஞானம் என்ற வகையில் இயேசுவைப் பற்றிய மற்ற அடையாளப் படுத்துதல் கொலோசெயருக்குப் பவுல் எழுதிய நிருபத்தில் சுட்டிக்காட்டப்படுகின்றது. கிறிஸ்துவின் நபர்த்துவம் மற்றும் ஊழியம் ஆகியவற்றைக் குறைத்து மதிப்பிடும் "ஞானம்" ஒன்றைப் பரிந்துரைத்த போதகர்களால் அவர்கள் இடர்பாடு அடைந்திருந்தார்கள், விசேஷமாக அப்போதனையானது படைப்பு மற்றும் மீட்பில் அவரது பணியைக் குறைத்து மதிப்பிட்டது.[1] பவுல், இப்பொழுது வெளிப்படுத்தப்பட்டுள்ள தேவனுடைய இரகசியமானது "அவருக்குள் (கிறிஸ்துவுக்குள்) ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது" (கொலோ. 2:3) என்று வலியுறுத்தியதன் மூலம் அதற்குப் பதில் அளித்தார்.

கிறிஸ்துவைப் பற்றிய இந்த வழியைப் பவுல் பேசும் பொழுது, அவர், கிறிஸ்து தேவஞானத்தின் கருவூலமாக மட்டும் இருந்தார் என்று கூறவில்லை. அவர் தேவன் என்ற வகையில் இயேசு இப்பொழுது முழுமையாக வெளியான தேவஞானமாயிருக்கின்றார் என்று அறிவித்தார். ஏற்கனவே பவுல், கிறிஸ்துவைத் தேவனுடைய ரூபமாயிருக்கின்றவர் என்று அறிவித்திருந்தார். கூடுதலாக அவர், தேவகுமாரன் படைப்புக்கு முன்னிருந்த நிலையை வலியுறுத்தினார். வேதாகமம் முழுவதிலும் கிறிஸ்துவை மிகவும் மேன்மைப் படுத்தும் வசனப் பகுதிகளில் ஒன்றான கொலோ. 1:16, 17அ - வில் அவர் பின்வருமாறு கூறினார்:

> ஏனென்றால், அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துகளும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக் கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது. அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், ...

தேவனுடைய படைப்பின் ஞானமாகக் கொலோசெயரில் விவரிக்கப்பட்டுள்ள குமாரன் தேவனுடைய குமாரனாக மட்டும் இல்லை; அவர் குமாரனாகிய தேவனாகவே இருக்கின்றார். "ஏனென்றால்,

*தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப் பிரகாரமாக அவருக்குள் [கிறிஸ்துவுக்குள்] வாசமாயிருக்கிறது'' (கொலோ. 2:9). Pleroma (''பரிபூரணம்'') என்ற கிரேக்க வார்த்தை கொலோசெயருக்கு எழுதிய நிருபத்தில் இதற்கு முன்னும் காணப்படுகின்றது: ''சகல பரிபூரணமும் அவருக்குள்ளே [கிறிஸ்துவுக்குள்ளே] வாசமாயிருக்கவும் ... அவருக்குப் பிரியமாயிற்று'' (கொலோ. 1:19, 20).*

*வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், தேவனுடைய சாராம்சம் கிறிஸ்துவுக்குள் தங்கியுள்ளது. தேவனுடைய சாராம்சம் ஆவியான வரேயாவார் (யோவா. 4:24). புதிய ஏற்பாட்டில் கிரேக்க வார்த்தையான theotes என்பது தோன்றும் ஒரே இடம் கொலோ. 2:9 ஆகும். தேவனின் முழுமைத்துவத்தில், தெய்வீகத்தின் முழு இயல்பு (சாராம்சம்) கிறிஸ்துவில் காணப்படுகின்றது. இது கொலோசெயர் நிருபத்தின் சந்தர்ப்பப் பொருளில் வரலாற்று இயேசுவை உள்ளடக்குகின்ற ஒரு நித்திய உறவு ஆகும்.[2]*

## *மீட்பில் பிரதிபலிக்கப்பட்டுள்ள வகையில்*

*இயேசுவைத் தேவனுடைய ஞானம் என்று கருதுவது நமது வழக்கமான தொடக்க நிலையல்ல. நம்மில் பலர் இயேசு தேவனுடைய குமாரன், அவர் நபர்த்துவத்தில் பிதாவாகிய தேவனுடைய அன்பு, இரக்கம் மற்றும் கிருபை ஆகியவற்றை வெளிப்படுத்தினார் என்றே முதலாவது அறிமுகப்படுத்தப் பட்டோம். பிதாவினுடைய அன்பின் அளவானது, நமது மீட்புக்காக அவர் தம் குமாரனைச் சிலுவையில் ஒப்புக் கொடுத்ததில் செயல் விளக்கப் படுத்தப்பட்டது. எனவே, நாம் இயேசுவிடம் சரணடைகின்ற பொழுது, அவரை மரித்தோரில் இருந்து எழுப்பிய தேவனுடைய வல்லமையில் நாம் கொண்டுள்ள விசுவாசத்தின் மூலம் நாம் எழுப்பப்படுகையில் அவர் நம்முடைய இரட்சகராகின்றார். இதுவே கிறிஸ்துவின் சுவிசேஷம் என்ற நற்செய்தியாக உள்ளது. கிறிஸ்துவைப் பற்றி நாம் மேலும் நோக்கும் பொழுது, அவர் நமக்குத் தேவனுடைய அன்பு, இரக்கம் மற்றும் கிருபை ஆகியவற்றிற்கு மேலானவைகளைக் காட்டுகின்றார் என்று நாம் காண்கின்றோம். அவர் நமக்குத் தெளிவாக்கப்பட்ட தேவஞானமாகவும் இருக்கின்றார்.*

*பவுல் கொரிந்தியர்களுக்கு எழுதிய பொழுது, பலர் சரியான இடத்தில் நோக்காததினால் தேவஞானம் அவர்களுக்கு உறுதிப்படுத்தப்படவில்லை என்பதை நினைவூட்டினார். யூதர்கள் அடையாளங்களில் மோகம் கொண்டிருந்தார்கள். அவர்கள் அற்புதங்களைக் காண விரும்பினார்கள் (மத். 12:38, 39). கிரேக்கர்கள் ஞானத்தைத் தேடினார்கள், ஆயினும் பெரும்பாலும் தத்துவம் என்ற ஊடகத்தில் மூலமாகவே அவர்கள் அதைத் தேடினார்கள், அதைப் பவுல் ''உலக ஞானம்'' என்று விவரித்தார். இந்தப் பின்னணியில் ''நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்; ... கிறிஸ்து தேவபெலனும் தேவஞானமு மாயிருக்கின்றார்'' (1 கொரி. 1:23, 24) என்று பவுல் கூறினார். இவ்விதமாக, நமக்கான தேவனுடைய இரட்சிப்பின் திட்டம் மூலமாக ''கிறிஸ்துவே*

*தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்" (1 கொரி. 1:31). ஆகையால் குமாரனானவர் தமது மீட்பின் ஊழியத்தில் பிதாவின் ஞானத்தைப் பிரதிபலிக்கின்றார்.*

## படைப்பில் காட்சிப்படுத்தப்பட்ட வகையில்

*தேவன் ஒருபொழுதும் ஒரு மதியீனமான செயலைச் செய்ததில்லை அல்லது ஒரு மதியீனமான வார்த்தையைக் கூறியதில்லை, ஏனென்றால் அவர் எல்லையற்ற அறிவுள்ளவராக, எல்லாம் அறிந்தவராக இருக்கின்றார். எல்லா வல்லமையும் நிறைந்தவராய் இருக்கும் அவரது இயல்பைப் போலவே அவர் எல்லா ஞானமும் உள்ள இயல்புடையவராகவும் இருக்கின்றார். ஆகையால், தேவனுடைய ஞானத்தை அவருடைய குமாரனாகிய இயேசுவில் காணும் போது அது நம்மை வியப்படையச் செய்யக் கூடாது. தேவனுக்குள் நித்தியத்திற்கும் படைப்பில் இருந்தே உடன் உறைந்த தேவ ஞானத்தின் தோற்றமாக (வெளிப்பாடாக) அவர் இருக்கின்றார், அது இப்பொழுது வரலாற்றில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.*

*இப்பொழுது தேவனுடைய ஞானம் இயேசுவில் "முடிவாக்கப் பட்டுள்ளதை" கவனித்திருக்கின்ற நாம் படைப்பின் குறிப்பிடத் தக்க நிகழ்ச்சியை "மிகவும் பின்னோக்கி" காணுவோம். அங்கு ஞானம் இருக்கின்றது! அது நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றதா? நிச்சயமாகவே இல்லை. தேவனுடைய (சகல ஞானம் நிறைந்தவர் என்ற) கண்ணோக்கில், மற்றும் பின்னால் இயேசுவில் (புதிய ஏற்பாட்டில்) தேவ ஞானம் வெளிப்படுத்தப்பட்டதின் வெளிச்சத்தில், படைப்புக்கு முன்னதாகவே கூட ஞானத்தை நாம் கண்டால் திகைப்படையக் கூடாது.*

*புதிய ஏற்பாட்டுப் போதனைகள் இயேசுவைத் தேவனுடைய ஞானத்துடன் இணைக்கின்றன. அங்கு காணப்படும் சத்தியங்கள் தேவனுடைய ஞானம் நித்தியமாய் இருக்கிறதென்றும், அது படைப்பில் செயல்பாடுள்ளதாய் இருந்ததென்றும் காட்டுகின்றன. புதிய ஏற்பாட்டின் எழுத்தாளர்களுடைய நோக்கில் இருந்து, நாம் காணும் தேவனுடைய நித்திய ஞானமானது குமாரனாகிய தேவனே தேவனுடைய படைப்பில் மும்முரமாய் ஈடுபட்டார் என்பதைத் தெளிவாக்குகின்றன. பரிசுத்த ஆவியானவரால் தரப்பட்ட இவ்வளவு ஆழமான உட்கருத்துக்களை மனிதரின் கண்களால் காணக் கூடிய நாம் எவ்வளவு பாக்கியம் பெற்றவர்களாய் இருக்கின்றோம்! அவைகளின் மூலமாக நாம், தீர்க்கதரிசிகளும் தூதர்களும் கூடப் பகுத்தறிய முடியாத சத்தியங்களைக் காண்கின்றோம் (1 பேது. 1:10-12; 2 பேது. 1:19-21). இது தேவன் "வளர்நிலை வெளிப்படுத்துதலை" நடைமுறைப்படுத்தினார் என்று அர்த்தப்படுத்துகின்றதா? ஆம், அவ்வாறே இது அர்த்தப்படுத்துகின்றது! வேதாகமத்தின் மொழியானது எதையேனும் அர்த்தப்படுத்துகிறதென்றால், அந்த அர்த்தமானது பழைய ஏற்பாட்டைக் காட்டிலும் புதிய ஏற்பாட்டில் நாம் தேவனை அதிகம் முழுமையாகக் காண்கின்றோம் என்பதேயாகும். தேவனுடைய வளர்நிலை வெளிப்படுத்துதலும், நமக்கான அவரது*

*சித்தமும் வேதவசனங்களில் காணப்படுகின்றன, அவை வேதவசனங்களுக்கு மட்டுமே கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இது இரண்டு ஏற்பாடுகளிலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது (உபா. 4:2; 12:32; நீதி. 30:5, 6; வெளி. 22:18, 19). தேவனுடைய வெளிப்படுத்துதல் பற்றிய அவரது அக்கறை மற்றும் அவரது வசனம் ஆகியவற்றின் எடுத்துக்காட்டுகள் அடிக்கடி இருக்கின்றன.*

*தேவனால் ஏவப்பட்டுப் புதிய ஏற்பாட்டை எழுதியவர்களின் எழுத்துக்களின் மூலம், நீதி. 8:22-31ல் அதன் எழுத்தாளர் கண்டதை விட அதிகமானவற்றை நாம் காண முடியும். அவர் ஞானத்தைத் தேவன் படைப்பில் மகிமையாக, மகிழ்வு நிறைந்ததாக வெளிப்படுத்தியதைக் கண்டார். நீதிமொழிகளின் வசனப்பகுதிகளில் நாமும் அதைக் காண முடியும். பிற்பாடு புதிய ஏற்பாட்டு வெளிப்படுத்துதலின் பயனாக, நாம் ஞானத்தை தேவனுடைய இயல்பின் (சாரத்தில்) விளக்கத்தின்படி ஒரு நபராகவும் காண முடியும் - அது உணராக் கருத்தொன்றின் (ஞானத்தின்) கவிதை நபர்த்துவமாக மட்டும் இருப்பதில்லை. வேறுவார்த்தைகளில் சொல்லுவதென்றால், குமாரனாகிய தேவன் படைப்பில் தேவனுடைய ஞானத்தைப் பிரதிபலிப்பதை நாம் காண்கின்றோம். ரோலாண்டு மர்ஃபி அவர்கள் தமது "ஜீவ விருட்சம்" என்ற நூலில் பின்வருமாறு கூறுகின்றார்:*

> *... ஞானத்தின் தொடக்கமும் அதன் அதிகாரமுடைமையும் படைப்பின் நபர்த்துவப்படுத்தப்பட்ட ஒழுங்கமைவைக் காட்டிலும் அதிகமானவற்றை ஆலோசனையாகத் தெரிவிக்கின்றன. ஞானம் ஏதோ ஒரு வகையில் கர்த்தருடன் அடையாளப்படுத்தப்படுகின்றது. ஞானம் என்ற பெண்ணின் அழைப்பானது கர்த்தருடைய குரலாய் இருக்கின்றது. அவள் தேவனுடைய வெளிப்படுத்துதலாய் இருக்கின்றாள், இயற்கையின் சுயவெளிப்பாடாக மட்டும் அவள் இருப்பதில்லை.*

*தேவனுடைய ஞானம் என்ற வகையில் கிறிஸ்து அந்த ஞானத்தை படைப்பிலும் உலகத்தின் மீட்பிலும் பிரதிபலிக்கின்றார். இந்த இணைவுகள் நாம் பயன்பெறும்படியாக வேதாகமத்தில் இருக்கின்றன. கிறிஸ்தவர்கள் - பவுல் உய்த்துணர்ந்தது போலவே - கிறிஸ்து தேவனுடைய ஞானமாய் இருக்கின்றார் என்பதை உய்த்துணர முடியும் (1 கொரி. 1:24).*

---

*குறிப்புகள்*

[1]Everett Ferguson, *Backgrounds of Early Christianity* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1987), 245-49. [2]*கொலோ. 1:20* Gerhard Delling *அவர்களின் "pleroma" என்ற பாடத்தை Theological Dictionary of the New Testament என்ற நூலில் காணவும்.*